
# 23 சுட்டி

1, ஜனவரி 1983
மாத இதழ்
50 காசு




FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010

## வேலைதேடிச் செல்லும் கூட்டம்



வறுமையால் விரட்டப்பட்டு, கையில் கால் காசின்றி ஆண்டு தோறும், உத்தரப்பிரதேசத்திலிருந்து சுமார் 75,000 கிராமத்தொழிலாளர்கள் 'ரயில் மேலேறி' இப்படி கிளம்புகிறார்கள். பக்கத்து மாநிலங்களான பஞ்சாப், ஹரியானாவின் கரும்புத் தோட்டங்களிலும், நெல் வயல்களிலும் இவர்கள் கொத்தடிமைகளைப் போல ஒட்டப் பிழியப்படுகிறார்கள்.

எங்கு செல்கிறோம் என்று கூடத் தெரியாமல் இவர்கள் கிளம்புகிறார்கள். எனவே ஆபத்துக்காலங்களில் கூட இவர்களுடன் குடும்பத்தினர் தொடர்புகொள்ள முடியாத நிலை.

ரயிலை விட்டு இறங்கியவுடன் ஏஜெண்டுகளும் பெரும் விவசாயிகளும் இவர்களைச் சூழ்ந்துகொண்டு, இவர்களைக் கொத்தடிமை கொள்ள போட்டி போட்டுக்கொண்டு கவ்வி பிடித்துக்கொள்கிறார்கள்.

இவர்களுக்குத் தரப்படும் உணவில் 'ஒப்பியம்' என்ற போதை மருந்து கலக்கப்படுகிறது. அரை மயக்கத்தில் வைத்து இவர்கள் மேல் கடுமையாக வேலை சுமத்துவது எளிதாக இருக்கிறது.

மத்திய மாநில அரசுகள் இவர்களை மீட்க தலைக்கு ரூ 4000 பட்ஜெட் ஒதுக்கியுள்ளனர். தொகையை சரியாக விநியோகிக்கவோ, பிற வசதிகளை நடைமுறையில் செய்வதோ இல்லை. எனவே வேறு வழியின்றி சாகாமலிருக்க மீண்டும் பழைய முதலாளிகளிடம் அடிமைத் தொண்டு புரிந்து அழிய ரயிலேற வேண்டியிருக்கிறது.



FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010

## இன்று

விலைவாசியைக்
குறைப்போம் என்றவர்கள்
விலையை
வாசிக்கத்தான்
வைத்திருக்கிறார்கள்
இங்கே
விலைவாசிக்குப்பதில்
விசாரணைக் கமின்ஷகள்
தான்
மலிவு!

ராஜராஜன்






## இகழ்ச்சி

"ஏற்பது இகழ்ச்சி"
ஆசிரியர் சொன்ன
ஆத்திச்சுவடி
அவ்வைப் பாட்டை
திருப்பிச் சொல்ல
குறுக்கிட்ட பையன்
குறும்பாய்க் கேட்டான்
"அப்படின்னா,
பல்பொடி
சத்துணவு
க்யூவில் நின்று
வாங்கறது
இகழ்ச்சிதானே சார்!"

ந.க. துறைவன்

## எம். எல். ஏ; எம். பி

ஒரே, ஒருநாள்
நமக்கெல்லாம்
வேலைக்காரனாக
நடித்து விட்டு
ஐந்து வருடங்கள்
ராஜ வாழ்க்கை
வாழ்பவர்கள்!!

தி.பு. சீதாராமன்



முன்பெல்லாம் ஒரு பண்டிகை வரப்போகிறதென்றால் ஒரு மாதத்திற்கு முன்பிலிருந்து எதிர்பார்ப்பு அலைகள் இதயக்கரையில் மோதிக்கொண்டேயிருக்கும். புதிய ஆடைகளை பண்டிகையன்று சதைகளுக்குச்சிபாரிசு செய்யும்போது கைகளை பட்டாசுகளுக்கு அர்ப்பணிக்கும் போது ஏதோ இந்தியாவையே சொந்தமாக வாங்கிவிட்ட இறுமாப்பு இருக்கும். காண்கின்றவர்களிடத்து எல்லாம்—ஆடைகளைக்காட்டி—அவர்களின் புருவங்களை உயரவைத்து சுயதம்பட்டம் அடித்துக்கொள்ளும் சிறுபிள்ளைத்தனம் ஏராளமாய் இறைந்திருந்தது.


இப்போதெல்லாம் இதெல்லாம் வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கிறது. பழைய பஞ்சாங்கத்தைப் புரட்டிப்பார்க்கும்போது இவ்வளவு அசிங்கமாக கிடந்தோமே என்று என்னுள்ளேயே கேலியின் கெக்கெலி கேட்கிறது.

பண்டிகைகளை எல்லாம் பெரிசுபடுத்துகிற துரைத்தனமெல்லாம் இப்போது தொலைதூரம் போய்விட்டன.—மாறாக— இப்போது பொங்கல் தீபாவளி எல்லாம் பாக்கெட்டிற்கு வேட்டு வைக்க விளைந்தவை என்ற சிந்தனை பிறக்கிறது.

அறியாமை நடத்துகின்ற இந்த அகலமான படப்பிடிப்பில் அறிவுத்தனமெல்லாம் செருப்போடு செருப்பாக வாயிலோடேயே விடைபெற்று விடுகிறது.

எத்தனையோ சோகங்களிடையே நான் சில நேரங்களில் மனம்விட்டு சந்தோஷமாக சிரிக்கிறேன். எனது எத்தனையோ மகிழ்ச்சிகரமான சனிக்கிழமை மாலைகள் பொங்கலை விட, தீபாவளியை விட சந்தோஷமானவை! நான் நிஜமாக சிரிக்கும் நாளெல்லாம் எனக்குப் பண்டிகை தான். —மேத்தாதாசன்

FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010



# இந்திய ஹாக்கி தோல்வியுற்றது ஏன்?

ஆசிய விளையாட்டுப்போட்டியில் இந்திய ஹாக்கிக் குழு பாக்கிஸ்தானிடம் பெற்ற கேவலமான மரண அடிக்கு இந்திய ஹாக்கி பெடரேஷனில் உள்ள கடும் ஊழலும், பாரபட்ச மனப்பான்மையுமே காரணம்.

விளையாட்டு வீரர்களின் உண்மையான ஆற்றலைவிட அவர்களின் பின்னணியும், செல்வாக்குமே இங்கு முக்கியம். 16 ஆண்டுகளுக்குப் பிறகு சென்ற ஒலிம்பிக்கில் நமக்கு ஹாக்கியில் தங்கப்பதக்கத்தைத் தேடித் தந்த குழுவின் தலைவரான சென்னை பாஸ்கரன் அநாவசியமாக ஏசியாடில் வெளியேற்றப்பட்டார். விலக்கலுக்குக் கூறப்பட்ட காரணம் அவருக்கு 31 வயதாகி விட்டது என்பதே. ஆனால் பாஸ்கரனைவிட ஒரு வயது மூத்த குர்ஜித் சிங் விளையாடுகிறார்.

ஹாக்கி பெடரேஷன் தலைவர் ஐ. எம். மகஜன், பெடரேஷனை பாக்கெட்டுக்குள் உள்ள பொருளாக நினைக்கிறார். தேர்வு குழுவுக்கும் இவரே தலைவர். இந்தியக்குழு செல்லும் எந்த வெளிநாட்டு பயணத்திலும் இவர் இருப்பார். தேர்வுக்குழு

நவம்பர் 81 முதல் பிப்ரவரி 82 வரை, உலக கோப்பைக்கு வெளிநாடுகள் சென்றபோது தலைவர் மகஜன் கேள்விமுறையற்று ரூ 92,283 வசூலித்து செலவிட்டிருக்கிறார். இதில் பொழுதுபோக்கு செலவு செய்ததாக வந்த ஓட்டல் பில் ரூ 40,000.

பெடரேஷன் பொருளாளர் பி. மட்டிலால், சென்ற ஏப்ரலில் உள்துறை அமைச்சுக்கு இந்த நிர்வாக சீர்கேட்டை விளக்கிக்கடிதம் எழுதி ராஜினாமாவே செய்துவிட்டார். இதன் பேரில் தலைவர் மேல் எடுத்த ஒரே நடவடிக்கை, அடுத்த வெளிநாட்டு பயணத்திற்கு அவருக்கு அனுமதி மறுத்தது தான். இதனால் தலைவர் ராஜினாமா செய்தார். பொருளாளரின் ராஜினாமாவை உடனடியாக ஏற்ற அரசு மகஜனின் ராஜினாமாவை ஏற்காமல், இவரைத் தொடர்ந்து தலைவராக வைத்து ஆதரித்து வருகிறது

# சுட்டியார் பதில்



பலர்: ஏன் சில மாதங்களாக சுட்டியார் பதில் சொல்வதில்லை?

சுட்டியார்: பதில் சொல்லவே காத்திருந்தேன். நிறைய கேள்விகள் வந்தன. ஆனால் பயனான நல்ல கேள்விகள் வறட்சியே. மௌனமானேன். கொஞ்சம் சேர்ந்தவுடன் நிமிர்கிறேன் நாலுபேரைச் சிந்திக்க வைக்கும் கூரான கேள்விகளைக் கேட்டு என்னை உசுப்புங்கள். உதவாக்கரை கேள்விகள் கேட்டால் மீண்டும் மௌனமாவேன்.

கீழ்ப்பாக்க கேசுக்கும் அரசியல் வாதிக்கும் உள்ள வித்தியாசம்?

—பாரதிப்ரியா, சென்னை-26

கீழ்ப்பாக்கம் கேசுகள் பெரும்பாலும் குணமாகிவிடும்.

தனியார் துறைகளை அரசுடமை ஆக்குவது போலப் பத்திரிகைகளை அரசுடமையாக்கி விட்டால் எப்படி இருக்கும்?

—இராணியல்கலை, தூத்துக்குடி-6

வானொலி, தொலைக்காட்சி போல பத்திரிகைகளும் இந்த அரசாங்கத்தின் செயல்களை நியாயப்படுத்தும் விளம்பர சாதனங்களாகவே இருக்கும்.

பாரதியாரின் படைப்புகளில் முரண்பட்ட கருத்துக்கள் இருப்பது பற்றி தங்கள் எண்ணம் யாதோ?

—நா. பிரகதீசுவரன், அறந்தாங்கி

பாரதியார் ஒரே இடத்தில் அமுங்கிவிடாமல், காலத்தோடு ஆரோக்கியமாக வளர்ந்திருக்கிறார் என்று தெரிகிறது.

பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்யும் மந்திரிகள் ஜாதி சம்மந்தமான மாநாடுகளில் கலந்து கொள்கிறார்களே!

N. T. C. பன்னீர் செல்வம், மன்னார்குடி.

அவர்கள் பகுத்தறிவு பிரச்சாரம் செய்யும் மந்திரிகள். பகுத்தறிவு மந்திரிகள் இல்லை.


ஓர் அரசியல் வாதியின் முதல் எதிரி யார்?

—கிங்பெல், பம்பாய்-89.

சந்தேகமில்லாமல் அஞ்சா நெஞ்சம் படைத்த பத்திரிகைகாரன்தான்.


FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010

# நூதன எண்ணெய்த் திருட்டு



தமிழக நுகர்பொருள் பிரிவைச் சேர்ந்த புலனாய்வுத் துறையினர் ஒரு நூதன எண்ணெய்த் திருட்டை அண்மையில் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் போன்ற எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல் பங்குகளுக்கு டாங்குகள் (எண்ணெய் லாரிகள்) மூலம் எண்ணெய் அனுப்புகின்றன அல்லவா? வழியிலேயே பாதி டாங்கு எண்ணெய் திருடப்படுகிறது. பெட்ரோல் பங்கு காரர்கள் பாதி குறைந்து விட்டதைச் சந்தேகிக்காமலிருக்க நீண்ட குறுகலான சிலிண்டர்களில் விளிம்புவரை எண்ணெயை நிரப்பி (கீழேபுகைப்படம்) டாங்குகளின் மேல்மூடி வழியே உள்ளே இறக்கி விடுகின்றனர்: எண்ணெயின் அளவைச் சோதித்துப்பார்க்கும் பங்குகாரர் அளவுகோலை இந்த சிலிண்டருக்குள் தானே விடுகிறார்! முழு டாங்கிலும் எண்ணெய் இருப்பதாக நம்பி பாதி டாங்கு எண்ணெய்க்கு முழுதொகையும் கொடுத்து ஏமாறுகிறார். மீதியிருக்கும் எண்ணெயை, இத்திருடர்கள் மறைவு இடத்தில் வைத்திருக்கும் பீப்பாய்களில் ஊற்றிக்கொண்டு, கலப்படம் செய்த எண்ணெயை டாங்கில் ஏற்றிச்சென்று பங்குகளில் ஊற்றுகின்றனர்.



சமீப காலமாக வாகனங்கள் அடிக்கடி பழுதாவதற்கும், கரியநச்சுப்புகை வாகனங்களிலிருந்து வெளியேறுவதற்கும், இவர்களின் கலப்படவேலையே முக்கிய காரணமோ?

திறமைமிக்க இந்த ஏமாற்றுவேலை சென்னை ஓட்டேரி கிருஷ்ணாதாஸ் சாலையில் சாராதோட்டம் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.



மறைவிடத்தில் திருட்டு எண்ணெயை சேகரிக்கும் பெரிய எணணெய்கிணறும், போலிசீல்கள் தயாரிக்க உதவும் கருவிகளும் கண்டு பிடிக்கப்பட்டன.

இந்த மோசடி வேலை வண்ணாரப் பேட்டை, தங்கசாலை, எண்ணூர், வியாசர்பாடி, திருவொற்றியூர் ஆகிய இடங்களிலும் கடந்த 6 மாதகாலமாக செழித்து வந்துள்ளது. எண்ணெய் கம்பெனி வாகனத்தை ரிப்பேர் செய்வது போன்ற போர்வையில் வெட்ட வெளிச்சத்தில், எண்ணெய் ஒரு பக்கம் திருடப்படுகிறது. திருட்டு 'எண்ணெய் சைடன்ஹாம் சாலையிலும், வால்டாக்ஸ் சாலையிலும் விற்கப்படுகின்றன. போலீசாருக்கு லஞ்சமும், லாரி டிரைவர்களுக்கு மாமூலும், ஒத்துழைக்காதவர்களுக்கு தொல்லைகளும் தவறாது அளிக்கப்படுகின்றன.

பெட்ரோல் அதிவேக டீசல் இவற்றின் மீதான தமிழக அரசின் ஆணை ஒன்றிற்கு தற்காலிக தடை விதித்திருப்பதால் எங்களால் இவர்களைப் பிடிக்க முடியவில்லை எனச்சாக்கு சொல்கிறது காவல்துறை.

"எண்ணெயின் அளவு, தரம் இவற்றில் நேர்மையாக இருப்பதுடன் ஏமாற்ற முடியாத நிபந்தனைகளுக்குட்பட்ட காண்டிராக்டர்களின் டாங்குகளையே அனுப்புகிறோம். எங்கள் முத்திரையை உடைப்பது முடியாத ஒன்று, மேலும் பொறுப்புள்ள கண்காணிப்பையும் அமைத்துள்ளோம்!" என்று பெருமைப்பட்டிருக்கிறார் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் டிவிஷனல் மானேஜர்.

இந்த நூதனத் திருட்டை நடத்தி வந்துள்ளவர்களிடம் இருக்கும் ஒற்றுமையும், உழைப்பும் திட்ட மிட்ட செயல்பாடும் எண்ணெய்கம்பெனி அதிகாரிகளிடமும், காவல் துறையிடமும் இல்லை. தீய சக்திகளிடம் இருக்கும் இந்த மூளையும், ஆற்றலும் ஆக்கப்பூர்வமாக திசை திருப்பப்படும் சூழலை உருவாக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

நன்றி, "ப்ரோப்"

—நிலா

FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010

**புது யோசனைகள்**

## வானொலி லைசென்ஸ் கட்டும் தொல்லை

வானொலி, தொலைக்காட்சி லைசென்சாகட்டும், மோட்டார், ஸ்கூட்டர் டாக்ஸ் கட்டுவதாகட்டும்—பணம் கட்டுவதற்குள் போதும் போதுமென்றாகி விடுகிறது. தொகையின் மதிப்பைவிட, அத்தொகையைக்கட்டும் கசப்பான முறையே நுகர்வோரை அச்சுறுத்துகிறது.

வானொலி, தொலைக்காட்சி, மோட்டார் வாகனங்கள் போன்றவற்றிற்கு ஆண்டுக்கு ஒருமுறை (தேதி வேறு மறந்து, அபராதம் கட்டும் அனுபவமே பலருக்கும்) வந்து கட்டுவதைவிட, முடிந்தவர்கள் 10 ஆண்டுகள் வரை சேர்த்துக் கட்டலாம் என்று செய்தால் என்ன? அல்லது ஒரு குறிப்பிட்ட மாடல்சுமார் 15 ஆண்டுகள் உழைக்குமென்றால், அதன் சராசரி ஆயுளை மதிப்புப்போட்டு, பொருளை வாங்கும்போதே மொத்தமாக இந்த லைசென்ஸ் தொகையை விரும்புவோரிடம் சேர்த்து வாங்கிக் கொள்ளலாம். பொருளின் ஆயுளுக்கும், இழுத்தடிக்கும் வரித்தொல்லை இருக்காதென்றால் பெருந்தொகை செலவழித்து பொருள் வாங்கும்போது கொசுறாக இதனையும் சேர்த்துகட்ட பலரும் முன்வருவர். அரசுக்கும் மொத்தமாக வருவாய் வரும். ஏராளமான வீண் உழைப்பையும், நேரத்தையும் நுகர்வோரும், அரசு ஊழியரும் மிச்சப்படுவதோடு, காகித, அச்சு செலவும் குறையுமே! எரிச்சலூட்டும் அனுபவமும் இராதே!—**நித்தியானந்தம்**


**பாலன் சகோதரர்கள்**

வீட்டிற்கோர் நூலகம் அமைக்க, இன்றே சேர்வீர். "**சரசுவதி குடும்ப புத்தக வங்கி**"-யில் பெறும் புத்தகங்களுக்கு 10% தள்ளுபடி. முழு விவரங்களுக்கு 50 காசு தபால் தலையுடன் எழுதவும்.

எம்மிடம் 'சுபம்' ஆண்டு சந்தா ரூ 3.80 மட்டுமே.

தொடர்புக்கு :- 380 செம்பியம் சாலை, கதிர்வேடு கிராமம்,
புழல் அஞ்சல், சென்னை-600 066


# நமது அவரை மருத்துவம்

- கொடிக்காய்களில் சிறந்தது அவரைக்காய்;
- மலிவான விலையில் நிறைய ஊட்டச்சத்தினைத் தருவது அவரை
- புரதம், சுண்ணாம்புச்சத்து, இரும்பு, வைட்டமின் சத்துக்கள் இதில் ஒருங்கே உள்ளன.
- மிக எளிதில் செரிமானமாகக் கூடியது அவரை: பலவீனமான குடல் உடையவர்களும், இரவு நேரத்திலும், பத்திய உணவாகவும் இது உண்பதற்கு ஏற்றது.
- முற்றிய அவரைக்காயைவிட அவரைப்பிஞ்சே நல்லது.
- வெண்ணிற அவரைக்காய் வாயு, பித்தம் இவற்றைக் கண்டிக்கும். உள்ளுறுப்புகளின் அழற்சியைப் போக்கும்; எரிச்சலை அடக்கும்.
- நீரழிவுநோய், பேதித்தொல்லை, அடிக்கடி தலைநோய் வருதல், ஜீரணக் கோளாறு, சீதபேதி, இவற்றிற்கு அவரையை அடிக்கடி உணவில் சேர்த்தால் பலனுண்டு.
- அஸ்ஸாமில் காது வலிக்கும், தொண்டை வலிக்கும் அவரைக்காயின் சாறைப் பயன்படுத்துகின்றனர்.
- இரத்தக் கொதிப்பை தடுக்கும் ஆற்றல் இதற்குண்டு என்பது சமீபத்திய கண்டுபிடிப்பு.
- அவரையைப்பற்றிய பழைய வைத்திய நூல்குறிப்பு கிடைத்துள்ளது:

"கங்குல் உணவிற்கும் கறிக்கும் முறைகளுக்கும் பொங்குதிரி தோடதோர் புண்சுரத்தோர் - தங்களுக்கும் கண்முதிரைப் பில்லநோய்க்காரருக்குங் காழுறையா வெண்முதிரைப் பிஞ்சாம் விதி"

— **சித்தன்**

FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010

## இந்தியக் கொத்தடிமைகள்

நமது மத்திய மாநில அரசுகள் சமீபகாலத்தில் கொத்தடிமைகளை (Bonded labour) விடுவித்துள்ளதாக மார்தட்டி கூச்சலிட்டுக் கொண்டிருக்கும் போது, கிடைத்துள்ள சில தகவல்கள் நமக்கு அதிர்ச்சியைத் தருகின்றன.

காந்தி சமாதானக்குழு நேஷனல் லேபர் இன்ஸ்டிட்யூட்டுடன் சேர்ந்து நடத்திய முற்றுப் பெறாத, ஆரம்பநிலை ஆராய்ச்சியில், மொத்தம் 22.4 லட்சம் கொத்தடிமைகள் இருப்பதாக கணக்கிட்டுள்ளது.

ஆனால் ஜூலை 14, 1982ல் லோக்சபாவில், "1982 மார்ச் 31 வரை மாநில அரசிலிருந்து கிடைத்துள்ள தகவலின்படி 1,39,494 கொத்தடிமைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்," என்று புள்ளிவிவரம் தருகிறது மத்திய அரசு.

உண்மையில் தாழ்த்தப்பட்ட, மலை சாதியினர் பழங்குடியினரின் அதிகாரியினால் திரட்டப்பட்டுள்ள புள்ளிவிவரம் இதோ:—

| மாநிலம் | காந்தி சமாதானகுழு கணக்கிடப்பட்டுள்ள கொத்தடிமை எண்ணிக்கை | கண்டுபிடிக்கப்பட்டுள்ளவர் எண்ணிக்கை 31.1.81 வரை | | |
|---|---|---|---|---|
| | | கண்டுபிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள் | மறுவாழ்வு பெற்றவர்கள் | மறுவாழ்வு பெற வேண்டியவர்கள் |
| ஆந்திரா | 3,25,000 | 12,701 | 9,146 | 3,556 |
| பீகார் | 1,11,000 | 4,803 | 2,803 | 1,800 |
| குஜராத் | 1,71,000 | 42 | 42 | — |
| கர்நாடகா | 1,93,000 | 62,699 | 52,868 | 9,831 |
| கேரளா | — | 700 | 308 | 392 |
| ம. பிரதேசம் | 4,67,000 | 1,531 | 58 | 1,473 |
| மகாராஷ்டிரா | 1,05,000 | — | — | — |
| ஒரிஸா | — | 52 | 343 | — |
| ராஜஸ்தான் | 67,000 | 6,000 | 6,000 | — |
| தமிழ் நாடு | 2,50,000 | 27,874 | 27,670 | 204 |
| உ. பிரதேசம் | 5,55,000 | 4,469 | 4,469 | — |
| மொத்தம் | 22,44,000 | 1,20,971 | 1,03,707 | 17,264 |

## மதத்தின் பெயரால் காட்டுமிராண்டித்தனம்

நமது அரசியல் நிர்ணய சட்டத்தின்படி நமது நாட்டில் எம்மதமும் சம்மதம். அதாவது அவரவர்க்கு விருப்பப்பட்ட மதத்தைச் சார்ந்திருக்க அனைவருக்கும் பூரண உரிமை உண்டு. ஆனால் இந்த மத சுதந்திரம் எக்காரணத்தை முன்னிட்டும் தனி மனித சுதந்திரத்தை குடிப்பதாக இருக்கக்கூடாது என்பதை மறந்து விடுகிறோம்.

ஒருவன் தனக்கு விருப்பமான கடவுளை எப்படி வேண்டுமானாலும், எவ்வளவு சிறப்பாக வேண்டுமானாலும் கும்பிட்டுக் கொள்ளட்டும். ஆனால் அவனது வழிபாட்டு முறைகள், மற்றவனுக்கு துன்பம் தருவதாக இருக்கக்கூடாது, என்பது மிக முக்கியம். உதாரணமாக காதைப் பிளக்கும் சத்தத்துடன் ஒலி பெருக்கியில் பாடல்களை, மந்திரங்களை ஒலிப்பது, எல்லா மதத்தினரும் செய்கின்ற மிகக் கொடூரமான அநாகரிகமான ஒரு செயல்.

இப்படி ஒலி பெருக்கியை வைத்துக் கொண்டு கத்தவைப்பதால் வீதியில் போக்குவரத்திற்குப் பெரும் இடைஞ்சல் ஏற்படுகிறது. குடியிருப்புப் பகுதிகளில் அதிகாலையில் நள்ளிரவில் என்று நேரம், காலம் இல்லாமல் கத்துவதால், மிகுந்த எரிச்சல் ஏற்படுவதுடன், நோயாளிகள், மாணவர்களுக்குப் பெரும் துன்பத்தை விளைவிக்கிறது. இதற்காக யாரும் நடவடிக்கை எடுக்க முடிவதில்லை. ஏனென்றால் குறிப்பிட்ட மதத்தினரைப் பாதிக்கும் என்று அதிகாரிகள் அஞ்சுகின்றனர். இந்த இடத்தில் பறிபோகும், துறையாடப்படும் தனி மனித சுதந்திரத்தைக் காப்பது யார்?

மேலும் மதத்தையோ, தன் சொந்த வழிபாட்டு முறையையோ, காரணம் கொண்டு, ஒரு கும்பல் சேர்த்துக் கொண்டு, கடைகளில், வீடுகளில் வாகனங்களை வன்முறையில் நிறுத்தி கட்டாய நீதி வசூல் செய்கின்றனர். பிற மதத்தைச் சேர்ந்தவன் என்றாலும் விடாமல் அராஜக முறையில் தொல்லை தந்து பணத்தைப் பிடுங்குகின்றனர். இவன் சாமியை கும்பிட மற்றவன் பணத்தைக் கேட்க இவனுக்கு என்ன உரிமை இருக்கிறது? இவன் மத சுதந்திரம், மற்றவன் மத சுதந்திரத்தைப் பறிக்கலாமா?

—கூ யராஜ்

FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010

# சாலை விபத்தில் நட்ட ஈடு - புதிய சலுகைகள்

1939-ம் ஆண்டு மோட்டார் வாகனச்சட்டம், விபத்துக்களில் பாதிக்கப்படுபவர்கள் நிவாரணம் பெற வழி செய்துள்ளது. பாதிக்கப்பட்டவர் பயணியாகவோ அல்லது பயணம் செய்யாதவராகவோ இருந்தாலும் நட்ட ஈடு உண்டு.

சமீபத்தில் இந்தப் பழைய சட்டத்தில் ஒரு சிறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. முன்பு, சம்மந்தப்பட்ட வாகன ஓட்டுநரின் தவறாலோ அல்லது வாகன சொந்தக்காரரின் தவறாலோ விபத்து நடந்ததாக பாதிக்கப்பட்டவர் நிரூபித்தால் மட்டுமே நட்ட ஈடு கிடைக்கும். அடிபட்டவரது தவறால் தான் விபத்து நடந்தது என்றால் அடிபட்டவருக்கு நட்ட ஈடு இல்லை. 'விபத்தில் ஈடுபட்ட வாகனம் தப்பி மறைந்து விட்டால், அடிபட்டவரால் நட்ட ஈடு கோர முடியாது. பாதிக்கப்பட்டவருக்கு இப்படி போதிய பாதுகாப்பில்லாத நிலைமையை அண்மைய சட்ட திருத்தம் மாற்றியுள்ளது.

இந்த சட்ட திருத்தப்படி, சம்மந்தப்பட்ட வாகன ஓட்டி அல்லது வாகன சொந்தக்காரர் இவர்களில் யார்மீது தவறில்லாமலிருந்தாலும் விபத்தில் உயிர் இழப்பவரது குடும்பத்திற்கு ரூ 15,000 கட்டாயம் உண்டு. நிரந்தர ஊனமாகி விட்டால் ரூ 7500 கிடைக்கும். தவறு அடிபட்டவர் மேல் இருந்தாலும் இதே தொகை, குறையாமல் அளிக்கப்படும். அடிபட்டவரது தராதரத்தைப் பொறுத்து அதிக தொகைக்கு வாய்ப்பு இருந்தால் அதனை இது பாதிக்காது.

விபத்தில் ஈடுபட்ட வாகனம் பற்றி பாதிக்கபட்டவர் தரப்பில் அறியவோ நிரூபிக்கவோ முடியாமல் இருந்தாலும் கூட, உயிர் இழப்பாக இருந்தால் ரூ 5000மும் பெருங்காயமாக இருந்தால் ரூ 1000மும் நட்ட ஈடு உண்டு. இதற்காகவே தனிநிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு செய்து இந்தத் தொகையைப் பெறலாம். இந்த புதிய சலுகை 1-10-82லிருந்து அமுலுக்கு வந்துள்ளது

வாகன விபத்து நடந்தால் அவசரமாக நீங்கள் கவனிக்க வேண்டியவை :

1. வண்டி எண், வண்டியின் தரம் குறித்துக்கொள்க.
2. நேரம், இடம் குறித்துக்கொள்க.



3. உடனே காவல் நிலையத்திற்குத் தகவல் தருக. காவல் துறையினர் விபத்து நடந்த இடத்தை வரைபடம் தயார் செய்ய உதவியாக தரையில் குறிப்பிட்டு வைக்க.

விபத்துக்குள்ளானவரை அருகிலுள்ள அரசு மருத்துவமனையில் சேர்க்க. மருத்துவரிடம் அடிப்படையான தகவல்களைத் தெளிவாகக் கூறுக. காவல்துறையினர் வருகைக்காக அடிபட்டவரை மருத்துவமனையில் சேர்ப்பதைத் தள்ளிப்போட வேண்டியதில்லை.

வாகன விபத்துக்களில் காவல் துறையினர் வாகன ஓட்டுநர் மீது கிரிமினல் வழக்குப்போடலாம். அந்த வழக்கின் முடிவு எப்படியிருந்தாலும் நட்ட ஈடு, வழக்கில் சொல்லப்படுகிற சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்வு செய்யப்படும். இது தனியாக சிவில் கோர்ட்டில் நடக்கும்.

மரணமானால், இறந்தவரது பெற்றோர், பிள்ளைகள் மனைவி அல்லது கணவன் போன்றோர் நட்ட ஈடுபெற அருகதை உண்டு. விபத்துக்குள்ளாகிய அவரது வருமானம் வயது, அடிபட்டதன்மை இவற்றைப் பொருத்து அதிகப்படி தொகை நிர்ணயிக்கப்படுகிறது. பொதுவாக வருமான இழப்பை ஈடுகட்டுகிற அடிப்படையில் இது கணக்கிடப்படுகிறது. மருத்துவச் செலவு, ஊட்டச்சத்துக்கான செலவு, காயத்தின்வலி, துன்பம், எதிர்கால வருமான இழப்பை ஏற்படுத்தும் ஊனமாகி, வேலைசெய்யும் திறனிழந்தால் இதற்கும், சராசரியாக வாழக்கூடிய மீதமுள்ள கால அவகாசம் இவற்றையெல்லாம் சேர்த்து மொத்தத் தொகை கணக்கிடப்படும்.

வழக்கறிஞர் வைத்து வழக்காட முடியாத ஏழ்மை நிலையிலுள்ளவர்களுக்கு 'தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக்கழகம்' கூடுமானவரை இலவசமாக வழக்காட ஏற்பாடு செய்கிறது. எல்லா மாவட்டங்களிலும் இதன் கிளைகள் இயங்குகின்றன. ஆனாலும் பலதரப்பட்ட தரகர்கள், கவர்ச்சிகரமான நம்பிக்கைகளைக் கொடுத்து பாதிக்கப்பட்டவர்களை மோசடி செய்தே வருகிறார்கள். உரிமைகளைத் தெரிந்து கொள்வதில் மட்டுமல்ல, அதனை அனுபவிப்பதிலும் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருந்தாக வேண்டும்.

— இரத்தினம்

FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010

## கணைகள் காயங்கள்

சமீப காலங்களில் ஏற்றத் தாழ்வுகளின் சிக்கலில் சீரழிந்து கிடக்கும சமுதாயத்தைக்கண்டு குமுறி பல இளங்கவிஞர்கள் சீறி எழுந்துள்ளார்கள். அந்தப்பட்டியலில் இடம் பெறத்தக்க இளைஞர்தான் வண்ணை வளவன்.

இவருடைய "கணைகள் காயங்கள்' அழகுணர்ச்சியோடு தீர்க்கமான சமுதாயப்பார்வையின் கண் பிறந்த கவிதைத் தொகுப்பாகும். பாரதி வழிவந்த நெருப்புக் கவிஞர் என்று அறிமுகமாகும் இவர் தம்து கவிதைகள்.

"எரிப்பது மனிதர்களை அல்ல|தீய மனங்களையே"

என்று தொடங்குகிறார். சுரண்டல் பேர்வழிகளைச் சிலந்திகளாய் பாவித்து "நாளை நிச்சயம்" என்ற கவிதையில் சாவுமணி ஒலிக்கிறார். மதவெறிக்கு "கொளுத்துங்கடா" நல்ல் சாட்டை.

புதிய பார்வையில் "அந்தி", மரங்கள் இளவேனில் "கவிதைகள் மிளிர்கின்றன. குத்தூசிகளாய் பாயும் பொடிக்கவிதைகளான 'ஜமாய்டா ராஜா' "தாகம்", "அவதாரங்கள் எல்லாம் பெரிய சமாச்சாரங்களை அனாயாசமாக அளந்துவிடும் வாமன அவதாரங்கள்.

தஞ்சைக் கோயிலை, இராஜராஜசோழன் தனக்குத்தானே கட்டிக்கொண்ட நினைவாலயமாக பார்க்கும் புதிய பார்வையுடைய கவிஞர், மரபுக்கவிதைகளின் சந்தத்திற்கு மட்டுமே சொந்தமான சில ஆழமில்லா ("பழகு தமிழ்ச்சிரிப்பினிலே பாடல் தோன்றும்|பாவையவன் சிரிப்பினிலே காதல் தோன்றும்") கவிதைகளை வெளியிட்டிருப்பதை தவிர்த்திருக்கலாம்.

"ஆளுங்கட்சியில்|சேர்ந்த|அயோக்கியன்|யோக்கியனாகும் போது|
நாங்கள் கூட|கஸ்டமர்|இல்லாத போது'கற்புக்கரசிகளே" என்று வாதிடும் விபச்சாரி பற்றிய கவிதையைப் போலவே, ஏக்கமும், சீற்றமும் குறும்பும், சொல்லழகும் கொண்ட எளிய கவிதைகளைக் கொண்ட இத்தொகுப்பு நமது ஆதரிப்பிற்குரியது.

வெளியீடு : ஆனந்த பதிப்பகம், 7, சோமு செட்டி 6வது தெரு, இராயபுரம் சென்னை.600 013 விலை . ரூ 5.00

—'பட்டங்கட்டி'

## அரசு செலவில் அமைச்சர்களுக்கு அரண்மனைகளா?

நமது தமிழக அமைச்சர்களுக்காக ரூ 2 கோடியே 20 லட்சம் செலவில் 24 வீடுகள் சென்னையில் கட்டப்படுகின்றன.

நமது மாண்புமிகு அமைச்சர்கள் பலருக்கு ஏற்கனவே நகரத்தில் பல நாகரிக பங்களாக்கள் சொந்தமாக இருப்பது அனைவரும் அறிந்த விஷயம். எந்த அமைச்சரும் வீடின்றி தெருவில் நிற்கவில்லை.

அரசு இவர்களுக்காக, இவ்வளவு செலவில் வீடுகள் கட்டுவது ஒரு புறம் இருக்க, சந்து பொந்துகளில், ஓட்டு வீடுகளிலும், கூட்டுக் குடியிருப்புகளிலும், வாடகை வீடுகளில் சொல்லொண்ணா துன்பம் அனுபவித்துவரும் லட்சக்கணக்கானோர் சொந்த வீடுகளை எப்படியாவது பெற ஏங்கி நிற்கிறார்கள். வீட்டு வசதி வாரியம் கட்டுத் தரும் வீடுகள், ஆயிரத்தில் ஒருவருக்குக்கூட கிடைப்பது இல்லை. பரிசுச்சீட்டில் விழும் வாய்ப்பை விட குறைவான வாய்ப்பே வீட்டிற்காக விண்ணப்பித்து, அது நமக்குக் கிடைப்பது.

அரசாங்க கட்டிடங்கள் கட்ட ஒதுக்கப்பட்டுள்ள ரூ 7 கோடியே 34 லட்சத்தில், அமைச்சர்களுக்குரிய 24 வீடுகளுக்கு மட்டும் 30% ஒதுக்கப்பட்டுள்ளது

ஆனால் அரசு தரும் வீட்டை அடுத்தவர்களுக்கு நல்ல வாடகைக்கு விடுவது என்பது டில்லி பாராளுமன்ற உறுப்பினர்கள் குடியிருப்புகள் தொடங்கி எம் எல் ஏ விடுதிகள் வரை நடப்பது தானே! நாம் பார்ப்பது தானே!

எஸ். ரமேஷ், க. ராமச்சந்திரன்

FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010

# இந்திரா காந்தி பேட்டி



அனைத்துலக வ்யாபாரியான பீனா லால்வாணி என்ற பெண்மணி லண்டனில் இந்திய விழாவொன்றை அண்மையில் துவக்கி வைக்கச் சென்றிருந்த பாரதப் பிரதமரைச் சந்தித்து பின் பேட்டியும் கண்டுள்ளார். 'இந்தியா டுடே' பத்திரிகை வெளியிட்டு கடும் விவாதத்திற்கு உள்ளான இப்பேட்டியிலிருந்து சில பகுதிகள் :—

__உங்கள் தந்தையாரைத் தவிர, உங்களை உருவாக்கியவர்கள் (Mentar) யாரென்று கருதுகிறீர்கள்?__

என் தந்தை என்னை உருவாக்கியவர் என்று நான் நினைக்கவில்லை.

__(பெரோஸ் காந்தியைத் திருமணம் செய்வது தொடர்பாக எழுந்த எதிர்ப்புக்களை) நீங்கள் ஒரு வழியாக சமாளித்தீர்களா?__

சமாளிப்பது என்ற கேள்விக்கே இடமில்லை. எனக்கு வேண்டியதை, நான் எப்போதும் செய்து முடிப்பேன்.

__அவர் (பெரோஸ் காந்தி) தான் உங்கள் வாழ்வின் முதல் ஆணா?__

அப்போதும், எப்போதும் என் வாழ்வின் ஒரே ஆண் அவர்தான். என் நெருக்கமான, தனிப்பட்ட கணங்களை அவருடன் பகிர்ந்து கொண்டிருக்கிறேன்.

__இவ்வளவு பரபரப்பான வாழ்வில், உங்களை ஒருசாதாரண தாயாக அழைக்கலாமா?__



என் குழந்தைகளுக்காக நான் எல்லாமே செய்தேன். அவர்களை யாரும் தொடக்கூட அனுமதித்ததில்லை. எனக்குத் தெரிந்த எல்லா தாய்மார்களையும் விட அவர்களை பராமரித்தேன்.

__வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் எண்ணிக்கை பெருகிவரும் நிலையில் அவர்களுக்கு உங்கள் அறிவுரை என்ன?__

இந்தியாவில் ஒரு அனுகூலம் உண்டு. மற்ற நாடுகளைவிட, நம் நாட்டில் நிறைய வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். இவ்வசதி பணக்காரர்களுக்கென்றல்ல, நடுத்தர வர்க்கத்தினருக்கும் உண்டு. பெரும்பாலான குடும்பங்கள் கூட்டுக் குடும்பங்களாக இருப்பதும் இங்கு ஒரு வசதியே. இதனால் குழந்தைகளும், வயதானவர்களும் நன்குபராமரிக்கப்படுகின்றனர். தாய்மார்களாகிய நாம் சலிப்படையக் கூடாது. ஒரு பெண் இவ்வுலகிற்கு ஒரு குழந்தையை கொண்டு வந்தால், அதற்கு உரிய பொறுப்பு தனக்கு உண்டென நினைக்க வேண்டும்.



__நம் நாட்டில் பெண்கள் அதிக அளவு துன்புறுவதில்லையா? வரதட்சணைக் கொடுமையை உதாரணமாகப் பார்ப்போமே!__

ஆனால் இது சில இடங்களில், நாட்டின் சிறு பகுதியில், அதுவும் பெரும்பாலும் வடநாட்டில் தான் இருக்கிறது.

__தென்னிந்தியாவில் வரதட்சணை பிரச்சனைகள் இல்லையா?__

ஒருசில சமூகத்தினரிடம் உள்ளது. இப்போது இக்கொடுமை முன்பைவிட அதிகரித்துள்ளதா அல்லது அதற்கு வெறுமனே அதிக விளம்பரம் தரப்படுகிறதா எனத் தெரியவில்லை.

__நீங்கள் வெற்றிகொள்ள நினைக்கின்ற பலவீனங்கள் ஏதேனும் உங்களுக்கு உண்டா?__

நிறைய, உதாரணத்திற்கு, சமைப்பது எப்படியென அறியவிரும்புகிறேன். தேவை ஏற்படும்போது சமைக்கத் தெரியாமலிருப்பது பெரிய பலவீனமென நினைக்கிறேன். எனினும் முட்டையும், பச்சைக்காய்கறியுமே என்னால் மகிழ்வுடன் உண்ண முடியும்.

__(உங்களது கஷ்டமான காலங்களில்) உங்களோடு அச்சூழலில் உடனிருந்து தோள் கொடுத்த சிலரைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?__

இல்லை. நானே முழுவதும் சொந்தமாகவே சமாளித்தேன்.

__மீண்டும் முதலிலிருந்து உங்கள் வாழ்வை நீங்கள் வாழ வாய்ப்பு கிடைத்தால், வேறு மாதிரியாக இருப்பீர்களா?__

சொல்வதற்கில்லை. எந்தச் சூழ்நிலையில் பிறக்கிறோம் என்பதைப் பொறுத்தது சுதந்திர இந்தியாவில் நான் பிறந்திருந்தால், வேறு மாதிரியாக நான் வாழ்ந்திருக்கக் கூடும்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010

# சரும நோய்கள் வராமல் தடுப்பது எப்படி ?

சொறி, சிரங்கு, ரிங்வர்ம், கரப்பான் வெட்டை முதலியவற்றால் சருமத்தின் மீது ஏற்படும் அரிப்பு நோய் 2 விதமாக வருகிறது. ஒன்று தொற்று நோயாக; மற்றொன்று பரம்பரையாக உடம்பில் உலோக உப்புக்கள், வைட்டமின்கள் குறையும்போது சருமநோய்க்கிருமிகள் தோலைத் தாக்குகின்றன. கீழ்க்கண்ட முறைகளைக் கடைபிடித்தால் வராமல் தடுத்துவிட முடியும்:-

1. உடம்பில் கந்தக, பாஸ்பரஸ், சுண்ணாம்பு சத்துக்கள் குறையாமல் பார்த்து கொள்ளவேண்டும். அதற்கு உணவில் காராமணி, எள், கடுகு, வெங்காயம், பூண்டு, தேன், ஆரஞ்சு ஆகியவற்றை அவ்வப்போது சேர்த்துக்கொள்க.
2. காரட்டை விடாமல் சேர்த்துக் கொள்பவர்களுக்கு சரும நோய்கள் வருவது இல்லை என்று ஒரு பிரபல ஆயுர்வேத மருத்துவர் கருதுகிறார்.
3. கத்திரிக்காயை உணவில் ஓர் அளவுக்கு மேல் உண்ணக்கூடாது. அதற்கு அரிப்பை ஏற்படுத்தும் இயல்பு உள்ளது.
4. உணவில் உப்பைக் கொஞ்ச கொஞ்சமாக குறைக்க.
5. தமிழக கடற்கரை ஓரங்களில் வசிக்கும் பலர் அதிகமாக சரும நோயால் பீடிக்கப்பட்டிருப்பதை ஒரு சமீபத்திய மருத்துவ சர்வே அறிவித்துள்ளது. இதற்கு காரணம் அவர்கள் அடிக்கடி உணவில் மீனை சேர்த்துக்கொள்வதுதான் என்று கண்டிபிடிக்கப்பட்டிருக்கிறது. அடிக்கடி மீன் சாப்பிடுவது சருமநோயை வர வழைக்கக் கூடும்.
6. இளமையிலிருந்தே சர்வாங்காசனம், பிராணயாமம் பழக்கப்படுத்திக் கொள்வது சருமத்திற்கும் நன்மை பயப்பதாகும்.

[அடுத்து : சர்க்கரை நோய் வராமல் தடுப்பது எப்படி?]

—சுட்டி பாரதி



# தமிழக அரசின் ஹெலிகாப்டர்

பெங்களூர் எச்.ஏ.எல் நிறுவனம் 'சிட்டாக்' ரக ஹெலி காப்டர்களை உற்பத்தி செய்து வருகிறது. ஆனால் இதை இங்கு வாங்குவோர் யாருமில்லை. ஆதலால் ஒவ்வொரு மாநில அரசின் தலையிலும் தள்ள முயன்று வருகிறது.

இதன் விலை ரூ 72 லட்சம் மட்டுமே! தமிழக அரசு இதை வாங்கி, சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள 'ப்ளையிங் கிளப்'பிற்குக் கொடுத்து பராமரிக்கச் சொல்லியிருக்கிறது.

ஓ.என்.ஜி.சி. போன்ற பெரிய பொதுத்துறை நிறுவனங்கள் கூட ஹெலி காப்டர்கள் வைத்துள்ளன. ஆனால் அவை வெளிநாட்டிலிருந்து தருவிக்கப் பட்டவை. நுண்ணிய பல கருவிகள் சாதனங்கள் கொண்டவை.

தமிழக அரசு வாங்கியுள்ள இந்த பெங்களூர் ஹெலி காப்டரைப் பராமரிக்க மட்டும் வருடம் ரூ 2 லட்சம் வரை அரசு அளிக்கிறது.
இதைத் தவிர தலைக்கு மாதம் ரூ 4500 சம்பளம் கொடுத்து 2 பைலட்டுகளை அமர்த்தியுள்ளது. அவர்களுக்காக 2 கார்கள், ஒரு டிரைவர், வீட்டிற்கு தொலை பேசி முதலிய வசதிகளுக்காகவும் அரசு தனியாக செலவு செய்கிறது.

'ப்ளையிங் கிளப்'பிற்குக் கொடுக்கப்படும் பணத்தில் 2 பொறியாளர்கள், 2 தொழில் நுட்ப வல்லுநர்கள், ஒரு பாதுகாப்பு அதிகாரி முதலானோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பைலட் உட்பட 6 பேர் மட்டும் அமரும் வசதி படைத்த இந்த ஹெலி காப்டர் இவ்வளவு செலவுகளையும் விழுங்கிக் கொண்டு, இந்த ஆண்டில் மொத்தம் 92 மணி நேரம் தான் பறந்துள்ளது.

ஒரே ஒரு முறை எம்.ஜி.ஆர் இதில் தூத்துக்குடி வரை சென்றார். மற்றபடி ஆந்திர மாநில அமைச்சர்கள் இதை வாடகைக்கு எடுத்துச் சென்று பயன்படுத்தி பலனடைந்துள்ளார்கள்!

—கா. இராமச்சந்திரன்

FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010

## எமக்கு வந்தவை

**நிஜங்களின் நிழல்கள் :** (மாத இதழ்)
ஆசிரியர்: எம். காமேஷ், 49.A, கெல்வயல் சாலை, பெரம்பூர், சென்னை.600011.
தனியிதழ்: 60 காசு.

**புதுப்புனல் :** (தனிச் சுற்றிதழ்) நிர்வாக ஆசிரியர், 7.A, பண்ருட்டி சாலை, வடலூர்.607303. அன்பளிப்பு: ரூ. 1/-

**பேசும் துளிகள் :** (தனிச்சுற்று மாத இதழ்)
ஆசிரியர்: துரைபாரதி, விசுவநாதபுரம், 18, மடவிளாகம், திருவிடைமருதூர்.612104.

**திருவிடம் :** (மாதமிருமுறை) ஆசிரியர்: திருவாரூர் சு. தென்கோவன், 13, பழைய பேருந்து நிலையம், திருவாரூர்.610001.
ஆண்டு சந்தா: ரூ. 24/-. தனியிதழ்: ரூ. 1/-.

**ஆன்மிக இன்பம் :** (சர்வ சமய ஆன்மிக மாத இதழ்) ஆசிரியர்: முஹயித்தீன் ஷாகுல் அமீத், முஹயித்தீன் பில்டிங், G.N.T. ரோடு, கும்மிடி பூண்டி.601201, ஆண்டு சந்தா: ரூ.10 தனியிதழ்: 90 காசு.

**திலகம் :** (வார இதழ்) ஆசிரியர்: எம். ராஜமன்னார், 22.1, ஐந்தாவது குறுக்கு தெரு, லேக் ஏரியா, நுங்கம்பாக்கம், சென்னை.600034, ஆண்டு சந்தா: ரூ. 52
தனியிதழ்: ரூ. 1.

**மின்னல் :** (இஸ்லாமிய மாத இதழ்) ஆசிரியர்: எம். முஹம்மது அப்துல்லாஹ். 2.A, காஜிமார் தெரு, மதுரை.625001. ஆண்டு சந்தா: ரூ. 20/-. தனியிதழ்: ரூ. 1.75

**வணங்கள் :** (கையெழுத்து மாத இதழ்)
ஆசிரியர்: பொ. ஜெயபாலன், வெளியிடுவோர் நீலப்பறவை வாசகர் வட்டம், 22, வரகனேரி பஜார், திருச்சி.620008.

**பர்ணசாலை மான்கள் :** (கவிதைகள்)
கவிஞர்கள்: எஸ். சேவற்கொடியோன், ரோஹிணி. வெளியீடு: ரோஹிணி பதிப்பகம், ஹவுசிங் யூனிட் எதிரே, கௌண்டம் பாளையம் கோவை.641030 விலை ரூ. 7.



**சென்சார்**

சினிமாவில் ஆடை உண்டா இல்லையா என்று ஆராய
சென்சார் போடும் அரசாங்கம் இந்த நாட்டில் காலமெல்லாம்
மேலாடை இன்றி வாடும் ஏழைகளை என்று கவனிக்கும்?

—குமுறும் நெஞ்சம்

## அண்ணா

அ.தி.மு.க அதிபர் எம். ஜி. ஆரால் நிறுவப்பட்டு, இன்று அண்ணா அறக்கட்டளையிலிருந்து வெளியாகும் அண்ணா நாளிதழ் தான் அதிகமாக அ.தி.மு.க கட்சித் தோழர்களால் படிக்கப் படுவதாகும்.

அண்ணாவின லாபகரமான பெயருக்குப் பின்னால் இருக்கும் கவர்ச்சியை தனது கட்சிக்கு முன்னால் இணைத்துக் கொண்டது போல, தனது பத்திரிக்கைக்கும் சூட்டியுள்ளார், எம். ஜி. ஆர்.
இன்று முரசொலிக்கு மாற்றாக அண்ணா விளங்கி வந்த போதிலும் இது அ.தி.மு.க வின் அதிகாரப் பூர்வமான ஏடு என்ற அறிவிப்பு எங்கும் இல்லை. எம். ஜி. ஆர் தன் கட்சியைத் துவங்கிய காலத்தில் உடன் இருந்த ராஜ்ய சபா உறுப்பினர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி நடத்தி வந்த "தென்னகம்" பத்திரிகை தான் அதிகாரப் பூர்வமான நாளேடாக இருந்தது. பின் எஸ். டி. சோமசுந்தரத்தின் 'சமநீதி', பிறகு ஜேப்பியார் நடத்தி வந்த முத்துச்சரம்—இவை அ.தி.மு.க விற்காக நிறைய வேர்வை சிந்திய இதழ்களாயினும், அவை நீண்ட நாட்கள் வாழ முடியாமல் பட்டுப்போயின.

ஆனால் நிறுவனர்: எம். ஜி. ஆர். என்று "அண்ணா" பத்திரிகைக்குக் கீழே இருக்கும் வார்த்தையின் பலத்தால் தான் "அண்ணா" ஓடிக் கொண்டிருக்கிறது. மற்றபடி மக்களின் தலைசிறந்த முற்போக்கு தமிழ் நாளிதழ் என்று பத்திரிகைக்கு மேலே 'ஆங்கிலத்தில்' தினமும் அச்சிட்டுக் கொண்டிருப்பது 'நடுநிலை நாளேடு' என்று போட்டுக் கொள்ளும் கட்சிப் பத்திரிகைகளிலிருந்து கொஞ்சம் புதுமையாக செய்ய வேண்டும் என்பது தான்.

'தினமும் பத்திரிகையின் இரு மூலைகளிலும் இடது புறம் அண்ணா, வலது புறம் பெரியார் படங்களைப் போடுவதைப் பார்க்கும் போது, இந்த இரண்டு பேர்களின் தனித்தன்மைக்குக் காரணமான எத்தனையோ, கருத்துக்களையும், (வியாபாரமானதை தால்) மூலையில் ஒதுக்கி விட்டதே நினைவுக்கு வருகிறது.

FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010

**சுட்டி முன் இதழ்கள் வேண்டுவோர் இதழுக்கு 25 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை [M.O.] அனுப்புக. முதல் 6 இதழ்கள் கைவசம் இல்லை.**

'அண்ணா வருகிறது' என்ற சுவரொட்டியைப் பார்க்கும்போது, தேவைப்பட்டால் அண்ணாவை அஃறிணையாக்கவும் தயங்கமாட்டார்கள் என்ற உணர்வே ஏற்படுகிறது.

பிற பத்திரிகைகள் விளம்பரங்களுக்கு ஆலாகப் பறக்கும்போது, அண்ணா அரசு விளம்பரங்களை பக்கம் பக்கமாய், எம். ஜி. ஆர் படத்தை பல்வேறு கோணங்களில் போட்டுத் திளைக்கிறது. நூற்றாண்டு விழாக்கள் வந்தால் விளம்பர போனஸ் முதலில் அண்ணாவுக்குத்தான் இதனால் இரு நன்மை. நிறைய சில்லறை வருவதுடன், எம். ஜி. ஆரின் சாதனைக்குக் கம்பீரமான விளம்பரமும் கிடைக்கிறது

எம். ஜி. ஆர் ரசிகர்களும், தி. மு. க. மேல் வெறுப்புற்றவர்களும் தொடர்ந்து 'கிக்கில் இருக்கவும், தங்கள் ரசனை அரிப்புகளை, சொரிந்து கொள்ளவும் தானே 'பணியாற்றுகிறது' அண்ணா!

அண்ணாவுக்கு வேறு என்ன இலக்கு? எம். ஜி. ஆரின் மனம் குளிரும்படி செய்தி வெளியிட்டுத்தரும் பொறுப்பை அண்ணாவில் ஆசிரியர் பரசுராமனும் சோலையும் ஏற்றிருக்கிறார்கள்.

'ரஷ்யாவிலும், அமெரிக்காவிலும் புரட்சித்தலைவரை மக்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள்—வெளிநாடு சென்று திரும்பிய எம். எல். ஏ பேட்டி' என்ற செய்தி தலைப்பாக வரும்.

அதே நேரம் வெளிநாடு சென்று திரும்பிய கழக எம். எல். ஏக்கள் சுங்க அதிகாரிகளிடம் வீடியோ டேப்பும் கையுமாக பிடிபட்டதை அண்ணா மூச்சு விடாது.

எம். ஜி. ஆரின் விருப்பு வெறுப்புகளுக்கு மட்டுமன்றி, அவரிடம் செல்வாக்குள்ளவர்களுக்கும் அண்ணா முக்கியத்துவம் தரும்.

பாரதி நூற்றாண்டு நிறைவு விழாவில் பலர் பேசியிருந்தும் கிட்டத்தட்ட ஒரு பக்கம் முழுவதும் செல்வி ஜெயலலிதாவின் ஆவேச உரை'யே இடம் பெற்றிருந்தது (17—12—82) மறுநாள் பத்திரிகையில் தான் மாண்புமிகு அமைச்சர் கோமதியின் பேச்சும், மற்றவர்கள் பேச்சும் வெளிவந்தது—அதுவும் மொத்தம் அரைக்கால் பக்கத்தில்!

முரசொலிக்குப் போட்டியாக எம். ஜி. ஆர். எழுதும் ரத்தத்தின் ரத்தமே கடிதமோ, காளிமுத்து எழுதும் குன்றத்து விளக்கு இலக்கிய கட்டுரையோ வெளியிட்டாலும், அவை தொடர்ச்சி இன்றி வெளிவருகின்றன. செய்தி வெளியீட்டு முறையில் முரசொலியை எட்டிப்பிடிக்க திணறும் அண்ணா அதே கட்டத்தில் பணியாற்றும் வலம்புரி ஜானின் பத்திரிகையியல் யோசனைகளைக் கேட்டாலாவது கொஞ்சம் தேறலாம்.

இந்தத் தேர்ச்சியெல்லாம் அவசியமில்லாமல் தான் அண்ணா ஓடுகிறதே! எம்- ஜி ஆர் ரசிகர்களும், அரசு நூலகங்களும் இருக்கும் வரை எது இல்லாவிட்டால் என்ன

அண்ணாவைப்படித்தவர்களுக்கு உருப்படியாக தெரிவது என்ன? "எம். ஜி. ஆர் டில்லி சென்றால் கூடவே அமைச்சர் ராமச்சந்திரனும் செல்வார்" போன்ற அதிமுக்கியம் வாய்ந்த செய்திகள் தானே.

பாமரர்களுக்கு 'அண்ணா' கவர்ச்சி இருக்கும்வரை தமிழக அரசியலில் புதிய திருப்பம் வரமுடியாது! அந்த திருப்பம் வரும்வரை அண்ணாஏடும் உயிர் வாழும்.

அடுத்து : 'சுட்டி'

—காஞ்சி, எழில்

**இதுவரை 'சுட்டி'யின் விமர்சனத்திற்கு உட்பட்ட பத்திரிகைகள் :**

| இதழ் எண்: | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | மசாலா பத்திரிகைகள் | 8 | கல்கி | 16 | தெ ஹிந்தி |
| 2 | இதயம் பேசுகிறது | 9 | ஆனந்த விகடன் | 17 | மங்கை |
| 3 | குமுதம் | 10 | கல்கண்டு | 18 | கலைமகள் |
| 4 | தினமணி கதிர் | 11 | துக்ளக் | 19 | தினமணி |
| 5 | ராணி | 12 | தினத்தந்தி | 20 | தாய் |
| 6 | சாவி | 13 | மக்கள் குரல் | 21 | தினகரன் |
| 7 | குங்குமம் | 14 | முரசொலி | 22 | அம்புலிமாமா |
| | | 15 | இந்தியன் எக்ஸ்பிரஸ் | | |

FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010

## நண்பர்களே!

சென்னை-600040.

நாம் உருவாக்க விருக்கும் வளமான எதிர்காலத்திலும், புதிய சமுதாய அமைப்பிலும் நம்பிக்கை கொண்ட வாசகர்களுக்குச் சுட்டியின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

புதிய எழுச்சியுடனும். நேர்மையான துணிவுடனும் சுட்டி புத்தாண்டில் வாசகர்களோடு கைகோர்த்து தனது பயணத்தை இன்னும் உத்வேகத்துடன் தொடர்கிறது.

மக்களைத் திசை திருப்பியும், மாயையில் ஆழ்த்தியும் வந்த முக்கிய மசாலா பத்திரிக்கைகளையும், வேறு சில இதழ்களையும், கடந்த 23 மாதங்களாக, சுட்டி தனித்தன்மையுடன் விமர்சித்து இனம் காட்டியது. ஆயிரக்கணக்கான வாசகர்களை இந்த விமர்சன வெளிச்சம் மசாலா மாயையிலிருந்து தட்டியெழுப்பி நிஜத்திற்கு நெருக்கத்தில் கொண்டு வந்துள்ளது என்பதை ஏராளமான வாசகர் கடிதங்கள் உணர்த்தியிருக்கின்றன.

பலவிதமான பொற்கனவுகளில் ஆழ்ந்திருக்கும் நம் பாமரர்கள் காலத்தின் கட்டாயத்தால் விழித்தெழும் போது, இன்று ராட்ஷச வளர்ச்சியுடன் பீடித்திருக்கும் இந்தப் பிற்போக்கு இதழ்கள் ஊ ழி க் கா ற் றி ல் உதிரும் சருகு இலைகளாக வீழும். மக்களுக்கு உண்மைகளை உணர்த்தவும் அவர்களை விழித்தெழச் செய்யவும், ஏராளமான இன்னல்களையும், இழப்புக்களையும் தாங்கி நிற்கும் முற்போக்கு இதழ்களை மக்கள் இனம் கண்டு கொள்வார்கள். அதற்கான ஆற்றலையும், கூட்டமைப்பையும், மசாலா இதழ்களின் பத்திரிகையியல் தேர்ச்சியையும், எளிய அணுகு முறைகளையும், எழுத்தாற்றலையும் இவை மேலும் மேலும் வளர்த்தாக வேண்டும்.

இனி அடுத்த கட்டமாக சுட்டி தனது 23 மாத இதழ்களை வாசகர்கள் முன் விமர்சனத்திற்கு வைக்கிறது. பிறரை விமர்ச்சிக்கும் சுட்டி தன்னையும் பாரபட்சமின்றி விமர்சனத்திற்கு வாசகர்கள் முன் உட்படுத்திக் கொள்கிறது. தன் குறைகளை மனப்பூர்வமாக வரவேற்று திருத்திக்கொள்ளவும் மேலும் தன்னை பயனுள்ளதாக்கிக் கொள்ளவும் விரும்புகிறது.

சுட்டியின் வாசகர்கள் மட்டுமின்றி கூர்மையாக சுட்டியைக் கவனித்து வரும் பத்திரிகைத்துறை, எழுத்துத்துறை, அ ன் ப ர் க ளு ம் நம்மிடம் கருத்து மாறுபாடு கொண்டோரும் கூட சுட்டியை விமர்சித்து எழுதுவதை வரவேற்கிறோம்; ஆரோக்கியமாக எதிர் நோக்குகிறோம்; விமர்சனக் கணைகளை சுட்டி கணைகளாக நினைக்காமல் கண்ணாடியாக ஏற்கும்; சரி செய்துக் கொள்ளும், சந்தோஷம் கொள்ளும், சுட்டியை இன்னும் சுத்திகரிக்க உங்கள் விமர்சன நெருப்பு உதவட்டும்.

பிற உங்களிடமிருந்து

அன்புடன்,
ஆசிரியர் குழு

## வாசகர் குமுறல்

தமிழ்நாட்டில் ரயில்வே சர்வீஸ் கமிஷன் நடத்தும் கிளார்க் வேலைக்கான தேர்வும், தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்தும் 5000 உதவியாளர்கள் வேலைக்கான தேர்வும் வரும் பிப்ரவரிமாதம் 6ம் தேதியன்றே நடக்கவிருக்கின்றன. பல லட்சக்கணக்கான வேலையற்றோர் நாள்தோறும் தினசரிகளில் வரும் விளம்பரங்களைப் பார்த்து பணம் கட்டும்போது இப்படி ஒரே நாளில் இருதேர்வுகள் வருவதால் ஒன்றை இழக்க வேண்டியதாகிறது. முதலில் ரயில்வே சர்வீஸ் கமிஷன் கிளார்க் வேலைக்கான தேர்வை அக்டோபர் மாதம் 26ம் தேதி நடத்துவதாக இருந்து பின் தள்ளிப்போடப்பட்டது.

இதேபோல் அன்று லஷ்மி விலாஸ் பாங்கின் கிளார்க் தேர்வும் ஸ்டாஃப் செலக்‌ஷன் கமிஷன் நடத்திய UDL தேர்வும் ஒரேநாளில் (5—12—81) நடந்தன. இப்படி வருடத்திற்கு 2 அல்லது மூன்று நிகழ்ச்சிகள்! முப்பது நாற்பது என்று ஒருபரீட்சைக்கு பணம் வாங்கும் நிறுவனங்கள் தங்களுக்குள்ளேயே ஒரு கூட்டு அமைப்பை ஏற்படுத்தி அந்த அமைப்பிடம் தேதிவாங்கி பரீட்சை நடத்தும் நிலைவந்தாலொழிய பரீட்சைக்கு பணம் கட்டுபவர்களின் நிலை பரிதாபம் தான்.

—சாந்தி, சிதம்பரம்

FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010

62 லட்சம் மக்கள் வாழும் பாரதத் தலைநகரில் 2 லட்சம் பேர்கள் நடைபாதையில் வசிக்கிறார்கள். 13 லட்சம் பேர்கள் சேரியிலும் 20 லட்சம் பேர்கள் மிக மோசமான நிலையிலும் வாழ்கிறார்கள்.

சுமார் 30 லட்சம் நகர வாசிகள் சுற்றுப்புற சுகாதாரமின்மையால் சரும நோய்களாலும், வயிற்றுத் தொல்லைகளாலும் அவதிப்படுகிறார்கள். டில்லி நகர வளர்ச்சிக் கழகம் (DDA) ஊழல் பெருச்சாளியாகும். ச.கஜ நிலத்தை ரூ 1.20 முதல் ரூ 2.60 வரை ஆங்கிலேயா கால விலைவாசிப்படி வாங்கிக் கொண்டு ரூ 100 முதல் ரூ 500 விற்று ரியல் எஸ்டேட் பிசினஸ் நடத்தி வருகிறது. வீட்டு மனைகள் இன்று ச. மீட்டருக்கு ரூ 5000 வரை விலையேறியதற்கு இக்கழகமே காரணம்.

"லட்யென்ஸ்" என்பார் கல்கத்தா, பம்பாயின் அவலங்களிலிருந்து புது டில்லியை திட்டமிட்டு அமைத்தார். பிரிட்டிஷ் ஏகாதியபத்தியத்தின் பூந்தோட்ட நகரமாக இது வருணிக்கப்பட்டது.

1960 இல் பதிவாகாத 110 சேரிக் குடியிருப்புகள், 1981இல் 612 ஆகப் பெருகி விட்டது. யமுனையை ஒட்டிய சாலையோரங்கள் நடக்க முடியாதபடி அசுத்தமாக்கப்பட்டிருக்கிறது. "ஷக்டாரா" பகுதி சேரி ஆசியாவிலேயே பெரியது!

ஏழைகளும், நடுத்தர வர்க்கமும் மேலும் மேலும் கீழே தள்ளப்பட்டு வரும் சூழலில் "ஏசியாட்', ஆயிரக்கணக்கான புதிய பணக்காரர்களை உற்பத்தி செய்திருக்கிறது-

புராரி வில்லேஜில் 3 ஆண்டுகளுக்கு முன்பு கட்டத் தொடங்கிய முக்கிய மேம்பாலம் இன்னும் முடியாத போது, ரூ 36 கோடி செலவில், ஏசியாடிற்காக 8 மேம்பாலங்கள் கட்டப்பட்டு விட்டன. யமுனை மேல், மாநில பேருந்து நிலையத்தருகே அவசியமான ஒரு மேம்பாலம் அமைக்க கடந்த 10 ஆண்டுகளாக அரசியல் வாதிகளும், அதிகாரிகளும் வாய்கிழிய பேசியும் இன்னும் எதுவும் நடக்கவில்லை.

ஏராளமான தொழிற்சாலைகளும், மின் உற்பத்தி நிலையமும், நெசவாலைகளும் நகரின் நெரிசல் நிறைந்த மையத்திலேயே இருப்பதால் டில்லியின் 70% காற்று கார்பன் நச்சு நிறைந்திருக்கிறது. தினமும் வெளியேறும் சுமார் 10 லட்சம் கிலோ லிட்டர் கழிவு நீரால் 48 கி.மீ நீள யமுனை புனிதம் இழந்து ஓடுகிறது. டில்லி நகர 5 ஆண்டு திட்டத்தில் யமுனை பராமரிப்புக்கு இடமேயில்லை. இன்னும் 20 ஆண்டுகளில் ஒரு சொட்டு குடிநீர் கூட யமுனையில் மிஞ்சியிருக்காது.

திட்டமும், நிர்வாக செயல்பாடும் இன்றி, உலகத்தின் இந்த 10-வது தலைநகரம் அழிவை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதாக நிபுணர்கள் அஞ்சுகிறார்கள். எங்கும், எதிலும் ஆதாயம் தேடும் நோக்கும், பொதுத்துறையின் சகிக்க முடியா ஊழலும் பெருகிவிட்டதன் நேரடி பாதிப்பை டில்லியில் பார்க்கலாம்.


கி.பி 2000 இல் டில்லி வாழத் தகுதியற்று விடும். மனிதக் காடாகவே அது விளங்கும் என்று எச்சரிக்கிறார் டில்லியின் பிரபல கட்டடவியல் திட்டவியல் நிபுணர் சைனி.

—எழில்



பல்கலைக்கழக பி.எச்டி ஆய்வுகள், வெறும் டாக்டர் பட்டத்திற்கெனவே நடத்தப்பட்டு வரும் இழிநிலை பெருகியுள்ளது. இந்நிலையில் இந்நாட்டின் விவசாய பிரச்சனைகளை தீர்க்கும் ஆவலுடன் சுட்டி வாசகர் திரு சிவராஜ், மணல் பாங்கான நிலத்தை நல்ல நிலமாக்குவது, மண் அரிப்பைத்தடுப்பது, மண்வளத்தைப் பாதுகாப்பது போன்ற பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் தாகத்துடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தாவரவியல் ஆய்வை மேற்கொண்டுள்ளது பாராட்டிற்குரியது. குமரி மாவட்டத்தைச் சேர்ந்த மேல்நிலைப் பள்ளி ஆசிரியரான இவர் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையின் பேரரும் ஆவார்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010




# தோழர்கள்

வ. தேனப்பன்

யாரும் எதிர்பார்க்கவில்லை ஏன்? சிவசாமி சார் கூட இதை எதிர்பார்க்க வில்லை. வகுப்பில் நின்று பாடம் நடத்திக்கொண்டிருந்தவர் திடுதிப்பென்று ரத்தக்குழாய் வெடித்ததால் குபுகுபுவென்று ரத்தத்தைக் கக்கியபடி, பலி ஆடு போலத் துடித்துத் துடித்துச் செத்துப்போய்விட்டார்.

தலைமை ஆசிரியரும், மற்றவர்களும் ஓடிவந்து பார்த்தார்கள். எதிர்பாராத அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்ள முடியாமல் அழுதார்கள்.

சிவசாமி சார் வீடு, பள்ளிக்கூடத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தூரம் கூட இருக்காது. எப்படியோ அவர் இறந்த செய்தி, காட்டுத்தீயாகப் பரவி அவர் வீடுவரை போய்விட்டது.

அலறியடித்துக்கொண்டு அவர் மனைவியும் பிள்ளைகளும் ஓடிவந்தார்கள். கதறினார்கள்; கத்தினார்கள்; மயங்கி விழுந்தார்கள்.

அவர் உடலை வீடு கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டுமே என்ற கவலை, தலைமை ஆசிரியருக்கு அதிகமானது,

டாக்ஸியைத் தேடினார். ஒன்று கூடக் கிடைக்கவில்லை.

கடைசியில் ஒரு குதிரை வண்டிக்காரன்தான் வந்தான். ஏற்றுவதற்கு முன்னால் இருநூறு ரூபாய் வேண்டுமென்று கேட்டான்.

"சிவசாமி பரம ஏழை. உன்னை மாதிரி ஏழைகளுக்கிட்டே இவ்வளவு அதிகமா கேக்கலாமாப்பா?. அரை கிலோ மீட்டர் தூரம்கூட இருக்காதுப்பா!" என்றார் தலைமை ஆசிரியர்.

"பணம்னு வந்திட்டா ஏழை பாழையெல்லாம் பாக்கமுடியாது சார். இது தான எங்களுக்கு சான்ஸ். பணம் கிடைக்கிற நேரத்தில சேர்த்துக்கிட்டாத்தான், எங்க பொழைப்பு நடக்கும். அரை கிலோ மீட்டரா இருந்தாலும்; வண்டியில பொணத்தையில்ல ஏத்தறோம்? அதுவும் உடம்பெல்லாம் ரத்தமா இருக்கு! யாராவது இதைத் தூக்க முடியுமா?

→

FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010

"நூறு ரூபாயாவது வாங்கிக்கப்பா!"

"இருநூறு ரூபாய்க்கு ஒரு காசு குறைஞ்சாலும், வர முடியாதுங்க. நீங்க வேணும்னா அதைத் தூக்கிக் கொண்டு போயிடுங்க பாப்போம்!" என்று ஏளனமாகச் சொல்லியபடி குதிரையைச் சாட்டையால் ஒரு அடி அடித்தான்.

தலைமை ஆசிரியருக்குச் 'சுரீர்' என்றது.

என்ன மனிதர்கள் இவர்கள்? கொஞ்சம்கூட மனிதாபிமானமே இருக்காதா? ஒருவனுக்குச் சாவு வந்தபோது கூடவா தோள்கொடுத்து உதவக் கூடாது? என்று ஆத்திரத்தில் பொங்கினார். யாரும் பிணத்தைத் தொடமாட்டார் என்ற தைரியத்தில், குதிரை வண்டிக்காரன் சிறிது தூரத்தில் வண்டியை நிறுத்திக்கொண்டு கேட்டான்;

"முடிவா என்ன சொல்றீங்க?"

தலைமை ஆசிரியர் தன்வீட்டுக் கட்டிலில் சிவசாமியின் உடலைத் தூக்கி வைத்தார். நான்கு ஆசிரியர்கள் தோள் கொடுத்தார்கள். குதிரை வண்டிக்காரனுக்கு 'சுரீர்' என்று உரைத்தது. அவன் முகம் செத்துப்போய் விட்டது!


**ரங்கா டைப் பௌண்ட்ரி**

- போஸ்டர் அச்செழுத்துக்கள் எங்கள் சிறப்புத் தயாரிப்பு
- எல்லாவித அச்சு எழுத்துக்கள், அச்சக உபகரணங்கள்.

அலுவலகம் : 73 ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-112

தொழிலகம் : 38, குட்டிசெட்டி தெரு, பெருமாள்பேட்டை, சென்னை-7

தொலைபேசி : 37999, 664293

இந்திய/உலக நாடுகளின் தமிழ் பேனா நண்பர்களின் நூற்றுக்கு மேற்பட்ட, முகவரிகளுடன் பல பயனுள்ள வெளிநாட்டுப் பத்திரிகைகள்/புத்தகங்களை இலவசமாக பெறுவது பற்றிய விவரங்கள், முகவரிகள் கொண்ட கதம்பம்

**மயூரா பப்ளிகேஷன்ஸ்**

ஞானப்பிரகாசம், சிதம்பரம்-608 001

விலை ரூ 10



சுட்டி இனி ஒவ்வொரு மாதமும் **முதல் தேதியன்றே** வெளிவரும்.

12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ 5-00

தனிப்பிரதி 50 காசு

எல்லாத் தொடர்புகளுக்கும்:—

ஆசிரியர் குழு, '**சுட்டி**'

1494, அண்ணா நகர், சென்னை-600 040

**சுட்டி முன் இதழ்களைப் படிக்கவில்லையா?**

ஒவ்வொரு இதழும் உங்களை விழிப்பூட்டும்-அறிவூட்டும். சரியாக பிரச்சனைகளைப் பார்க்க துணைபுரியும். முன் இதழ்களை சேமியுங்கள், படிக்காதவர்களுக்கு வழங்கி பயன்படுத்துங்கள். தற்போது இதழ் எண்: 7 முதல் 22 வரை மட்டுமே கைவசம் உள்ளன. பெற விரும்புவோர் இதழுக்கு 25 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O.) அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

**சுட்டி விற்பனையாளர்கள் தேவை :** சுட்டி இன்னும் கடைகளில் விற்பனையாகாத எல்லா ஊர்களிலும் முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க, சுட்டியின் வளர்ச்சியிலும், கொள்கையிலும், ஆர்வம் கொண்டோரை சிறப்பாக இப்பணிக்கு நோக்குகிறோம்.


**'சுட்டி'யை இலவசமாக அறிமுகப் படுத்துங்கள்**

"சுட்டி" யைக் கேள்விப்படாத நண்பர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா? அவர்களுக்குப் படிக்கக்கொடுத்து அறிமுகப்படுத்த விருப்பமா? சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவரா?

அப்படியானால் அவர்கள் முகவரியை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் செலவில் இலவசமாக ஒரு மாதிரி இதழ் அனுப்புகிறோம். அஞ்சலட்டையில் மாதிரி இதழ் எனக்குறிப்பிடவும்.

ஒருவர் எவ்வளவு நண்பர்கள் முகவரி வேண்டுமானாலும் அனுப்பலாம்.


FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010




ஒலி பெருக்கித் தொல்லைகளை ஒழித்துக்கட்ட அரசு முன் வருமா?

ஆசிரியர்: நிர்மலா சுந்தர், வெளியிடுபவர்: பொ. இரத்தினம், 1494, அண்ணா நகர், சென்னை-40. அச்சிடுவோர்: J. S. கிட்ராஜ் ஷா, இருஷா பிரிண்டர்ஸ், 35 லப்பைதெரு, சென்னை-600 002.

FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010

கட்டு: மாத இதழ் 1, ஜன. 1983 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-56



http://www.thamizham.net
FREE E-BOOKS (TAMIL)
தமிழ்ச்சோலை


# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distribut ing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary. secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development pro grammes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Techno logy promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E BOOKS - www.thamizham.net - TM1879 / Dec 2010